IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW1

Name : பாலசுப்ரமணியன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025 சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் கரியாகவுண்டன்வலசில் குடியிருந்து வந்து ஆயில் மில் நடத்தி வருவதோடு கிரிபிரசாத் டிரேடர்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். 2012 ஆம் ஆண்டு கோயம்புத்தூர், ஆர் ஜி ஸ்ட்ரீட், கே ஆர் டிரேடர்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வந்த கிருஷ்ணன் என்பவர் என்னிடம் பருத்தி, புண்ணாக்கு வாங்கி வியாபாரம் செய்து வந்தார். 2012 ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் 68 மூட்டை பருத்தி விதை புண்ணாக்கு கேட்டிருந்தார். நான் 68 மூட்டைகளை கோயம்புத்தூருக்கு TN 33 2259 என்ற 407 டெம்போ வாகனத்தில் கிருஷ்ணன் என்பவருக்கு அனுப்பி வைத்தேன். கிருஷ்ணன் என்பவர் ரூபாய் 50,000/-த்தை எனக்கு எனது கடையில் வைத்து கொடுத்தார். நான் மேற்படி 68 மூட்டைக்கான பாக்கி தொகையை கேட்டபோது தருவதாக சொன்னார். மீண்டும் கிருஷ்ணன் என்பவர் போன் மூலம் 110 பருத்தி விதை புண்ணாக்கை அனுப்புமாறு கேட்டார். நான் கிருஷ்ணன் என்பவருக்கு ஈச்சர் வாகனத்தின் மூலம் 110 பருத்திவிதை புண்ணாக்கை அனுப்பி வைத்தேன். இந்த 110 மூட்டைக்கான பணத்தை கிருஷ்ணன் என்பவர் கொடுக்கவில்லை.

பிறகு மீண்டும் கிருஷ்ணன் என்பவர் எனது கடைக்கு வந்து கொஞ்ச நாட்களில் பணத்தை கொடுத்து விடுவதாகவும் 120 மூட்டை பருத்தி விதை புண்ணாக்கை கேட்டார். நானும் 120 மூட்டை புண்ணாக்கை அனுப்பி வைத்தேன்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.16 18:00:08 +0530

கிருஷ்ணன் என்பவர் பணத்தை தராததால் நான் நேரில் சென்று அவரது கடையில் கேட்டபோது 26.04.2012 முன் தேதியிட்ட 3,63,861/ ரூபாய்கான IDBI வங்கி காசோலையை கொடுத்தார். கிருஷ்ணன் கொடுத்த காசோலையை நான் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது போதிய பணம் இல்லை என காசோலை திருப்பப்பட்டுவிட்டது. அதன் பிறகு நான் நேரில் சென்று காசோலை திரும்ப வந்துவிட்டது தொடர்பாக கிருஷ்ணன் என்பவரை சந்திக்க சென்றபோது அங்கு நிறைய பேர் வந்திருந்தார்கள். அங்கு வந்து எல்லோரிடமும் என்னை போல் மோசடி செய்துள்ளதாக அவர்கள் சொன்னார்கள். அதன் பிறகு நான் மாவட்ட குற்றப்பிரிவு போலீசாரிடம் புகார் கொடுத்தேன்.

நான் கொடுத்த புகாரின் பேரில் கிருஷ்ணன் என்பவரை போலீசார் கைது செய்து அதன் பிறகு அவர் ஜாமினில் சென்று விட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இந்த புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கிருஷ்ணன் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். **19.02.2012-ம் தேதி அன்று கிருஷ்ணன் என்பவருக்கு 68 மூட்டை அனுப்பியதற்கான ரசீது அ.சா.ஆ. 2ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **19.02.2012 தேதிய கிருஷ்ணன் என்பவரின் கே ஆர் டிரேடர்ஸ் பெயருக்கு வழங்கிய ரசீது அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **03.03.2012-ம் தேதி அன்று கிருஷ்ணன் என்பவருக்கு 110 மூட்டை அனுப்பியதற்கான ரசீது அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **03.03.2012 தேதிய கிருஷ்ணன் என்பவரின் கே ஆர் டிரேடர்ஸ் பெயருக்கு வழங்கிய ரசீது அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.03.2012-ம் தேதி அன்று கிருஷ்ணன் என்பவருக்கு 120 மூட்டை அனுப்பியதற்கான ரசீது அ.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **19.03.2012 தேதிய கிருஷ்ணன் என்பவரின் கே ஆர் டிரேடர்ஸ் பெயருக்கு வழங்கிய ரசீது அ.சா.ஆ.7ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

கே ஏ முத்துசாமி என்பவரிடமிருந்து கிழங்கு மாவை நான் கிருஷ்ணன் என்பவரின் கே ஆர் டிரேடர்ஸ்க்கு இரண்டு லோடு வாங்கி கொடுத்தேன். அதற்கான தொகையை கிருஷ்ணன் என்பவர் செலுத்தவில்லை. கிருஷ்ணனின் கே ஆர்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.16 18:00:17 +0530

டிரேடர்ஸ்க்கு நான் கிழங்கு மாவு வாங்கி கொடுத்ததற்கான **17.03.2012 மற்றும் 28.04.2012 தேயிட்ட ரசிதுகள் அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **கிருஷ்ணன் 26.04.2012 தேதியிட்டு எனக்கு வழங்கிய காசோலை அ.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **27/4/2012-ம் தேதியன்று காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை அ.சா.ஆ.11ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கிரி பிரசாத் ட்ரேடர்ஸ் என்ற நிறுவனத்தை 2003 இல் இருந்து நடத்தி வருகிறேன். எனது நிறுவனம் முறையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். எனது நிறுவனத்தின் பதிவுச்சான்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கிரி பிரசாத் நிறுவனத்தின் உரிமையாளர் எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவி சரஸ்வதி பெயரில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக வியாபாரமானது கடன் அடிப்படையில் செய்யப்படும் போது அதற்கு பாதுகாப்பு ஆவணங்கள் எதுவும் வாங்கப்படுவது வழக்கம் என்றால் சரிதான். நான் எதிரியின் நிறுவனத்தை நேரடியாக சென்று பார்த்துள்ளேன். எதிரி கே ஆர் டிரேடர்ஸ் என்ற பெயரில் நிறுவனத்தை நடத்தி வருவதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணம் என் வசம் இல்லை. எதிரி எனக்கு முதல் முறையாக அவரது கடையில் வைத்து பணம் கொடுத்தார் தேதி சரியாக ஞாபகம் இல்லை.

எனது புகார் மனுவில் ரூபாய் 50,000/-த்தை எதிரி எனது வங்கி கணக்கில் செலுத்தி உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி காசோலை கொடுத்து எத்தனை நாட்கள் கழித்து இந்த புகார் கொடுக்கப்பட்டது என்றால் 15-20 நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டது. எனது புகாரில் காசோலை எங்கு வைத்து எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை எதிரி அவரது கடையில் வைத்து தான் கொடுத்தார். எனக்கு தனிப்பட்ட முறையில்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.16 18:00:24 +0530

எதிரியிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு என்றால் ரூபாய் 2,13,000/-. எனது நண்பர் முத்துச்சாமி என்பவருக்கு எதிரியிடமிருந்து வர வேண்டிய தொகை ரூபாய் 1,50,000/-. எனது புகாரில் எனக்கு தனிப்பட்ட முறையில் வர வேண்டிய தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல எனக்கும், முத்துசாமி என்பவருக்கும் வரவேண்டிய தொகை எவ்வளவு என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். எதிரியைத் தவிர எத்தனை நபர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்துள்ளேன் என்றால் நிறைய பேரிடம் வியாபாரம் செய்துள்ளேன்.

பொதுவாக லாரி அல்லது டெம்போ மூலமாக சரக்குகளை அனுப்பும்போது LR ரசீது வழங்கப்படுவது வழக்கம் என்றும், இந்த வழக்கில் நான் அந்த ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது கடையின் லெட்டர் பேடில் தான் ரசீது வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி சரக்குகளை பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு, ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்காகத்தான் எதிரி காசோலையை கொடுத்துள்ளார். எனது நிறுவனத்திற்கு சொந்தமாக லாரியோ, டெம்போ ட்ராவல்ஸோ உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள ரசீதில் எதிரியின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் எதிரி நேரடியாக வந்து கையொப்பம் செய்து பொருட்களை வாங்க மாட்டார். நாங்கள் பொருட்கள் வாங்கும் போதும் நேரடியாக கையொப்பம் செய்து வாங்குவதில்லை. எதிரி முறையாக சரக்குகளை பெற்றுக் கொண்டார் என்பதற்கு எதிரி கொடுத்த காசோலையை தவிர வேறு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் எதிரி சரக்குகளை வாங்கிக் கொண்டார் என்று ஒப்புக்கொண்டு தான் காசோலையை கொடுத்துள்ளார். நான் வழக்கின் எதிரியுடன் சுமார் ஒரு மாதம் மட்டும்தான் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டேன். எனது நம்பிக்கையின் பேரில்தான் முத்துசாமி என்பவர் எதிரிக்கு பொருட்கள் கொடுத்தார் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் எதிரியை முத்துசாமி என்பவருக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு காசோலையானது இரண்டு நிறுவனங்களுக்கும் சேர்த்து கொடுக்கப்பட்ட தொகை என்றால் சரிதான்.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2025.09.16 18:00:32 +0530

ஆனால் வழக்கு காசோலையானது கிரி பிரசாத் என்ற தனிப்பட்ட நிறுவனத்தின் பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலை முறையாக வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு காசோலை திருப்பப்பட்ட பிறகு நான் சட்ட அறிவிப்போ அல்லது மாற்று முறையான சட்டத்தின் கீழ் வழக்கு எதிரி மீது எதுவும் தாக்கல் செய்தானே என்றால் நான் நேரடியாக எதிரியை சென்று சந்தித்து கேட்டேன். நான் எதிரியின் நிறுவனத்தை நேரடியாக பார்த்ததில்லை என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள காசோலை மற்றும் திருப்பட்ட குறிப்பாணையானது 26.04.2012 மற்றும் 27.04.2012 தேதியிட்டது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கானது காசோலையின் காலக்கெடு தேதி முடிந்து ஒரு மாதம் கழித்து தான் இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் காசோலையின் காலக்கெடு தேதி குறித்து எனக்கு தெரியாது. கிரி பிரசாத் நிறுவனத்திற்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கிரி பிரசாத்தின் சட்டப்படியான உரிமையாளர் நான் இல்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. வியாபார ரீதியாக பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து நானே நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலை நிரப்பப்படாமல் கொடுத்த வெற்று காசோலை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை எதிரி கடிதம் மூலமாகத்தான் எனக்கு வழங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. வியாபார நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்பீட்டிற்கு நான் மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.09.16 18:00:44 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW2

Name : சண்முகம் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் திருநகர் காலனியில் வசித்து வந்து மரவள்ளி கிழங்கு வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் பாலசுப்பிரமணியன் என்பவர் எனக்கு தெரியும். கிருஷ்ணன் என்பவர் கோயமுத்தூர், ஆர் ஜி தெருவில் ஆர் கே டிரேடர்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறார். வழக்கின் புகார்தாரர் பாலசுப்பிரமணியம் எனது குடும்ப நண்பர் ஆவார். 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆர் கே டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு புகார்தாரர் பாலசுப்பிரமணியம் சுமார் 50 முதல் 75 மூட்டை கிழங்கு மாவை என்னிடம் வாங்கி கிருஷ்ணன் என்பவருக்கு லாரியில் அனுப்பி வைத்தார். அதற்கான தொகை ரூபாய் 75,000/-ம் ஆகும். 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆர் கே டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு புகார்தாரர் பாலசுப்பிரமணியம் சுமார் 50 முதல் 75 மூட்டை கிழங்கு மாவை என்னிடம் வாங்கி கிருஷ்ணன் என்பவருக்கு லாரியில் அனுப்பி வைத்தார். எத்தனை மூட்டை என்று சரியாக ஞாபகம் இல்லை. நான் கிழங்கு மாவிற்கான தொகையை கிருஷ்ணன் என்பவரிடமும், பாலசுப்பிரமணியன் என்பவரிடமும் கேட்டேன். அதற்கு பாலசுப்பிரமணியன் என்பவர் காசோலை வந்துள்ளதாகவும் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்து பணம் கொடுப்பதாகவும் சொன்னார். அதன்பிறகு காசோலை திருப்பப்பட்டுவிட்டதாக பாலசுப்ரமணியன் சொன்னார்.

பிறகு நானும் பாலசுப்ரமணியம் கோயம்புத்தூர் கிருஷ்ணன் என்பவரின் கடைக்கு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.16 18:00:52 +0530

சென்று கேட்டபோது அவர் கடையில் இல்லை. இரண்டு, மூன்று முறை நாங்கள் அங்கு சென்று பார்த்தோம். அங்கு அவர் இல்லை. போனில் பேசினாலும் 10 முறைக்கு ஒரு முறை தான் போனை எடுத்துப் பேசுவார். பணத்தை கொடுத்து விடுவதாக சொன்னார் ஆனால் தரவில்லை. அதன் பிறகு நானும், பாலசுப்பிரமணியம் சேர்ந்து ஈரோடு டவுன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகாரின் பேரில் கிருஷ்ணன் என்பவரை கைது செய்து ஜாமினில் விடுவித்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆர்கே டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் கிருஷ்ணன் என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை. புகார்தாரர் பாலசுப்பிரமணியம் மூலமாக எனக்கு தெரியும். நான் எனது நிறுவனத்தின் மூலம் ஆர்கே டிரேடர்ஸ் பெயருக்கு சரக்குகள் அனுப்பவில்லை என்றும், கே.ஆர். டிரேடர்ஸ் பெயருக்கு தான் சரக்குகள் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் சரக்குகள் அனுப்பியதற்கான லாரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது சரக்குகள் நேரடியாக எதிரி நிறுவனத்திற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான் பாலசுப்ரமணியம் மூலமாகத்தான் அனுப்பினேன். எதிரி எனக்கு நிலுவைத் தொகை செலுத்த வேண்டும் என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் போனில் சொல்லியுள்ளார். எனக்கும், எதிரிக்கும் எந்தவித வியாபார நடவடிக்கையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல ரசீதுகள் உள்ளது. நான் தாக்கல் செய்த ரசீதுகளை எதிரி பெற்றுக் கொண்டதற்கு எந்த கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். எனக்கும், எதிரிக்கும் நேரடியாக எவ்வித வியாபாரம் நடவடிக்கையும் இல்லை என்றும், பாலசுப்பிரமணியம் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.16 18:01:01 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : சுதந்திரராஜ் | Father Name | : |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை

நான் கரியாகவுண்டன்வலசுவில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சண்முகம் என்பவரிடம் கிருஷ்ணன் என்பவர் குச்சி கிழங்கு மாவு வாங்கி பணம் தரவில்லை என சொன்னார்கள். நான் சண்முகம் என்பவரிடம் குச்சி கிழங்கு விற்பனை செய்த வகையில் எனக்கு சண்முகம் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். 2012 ஆண்டு ஐந்தாம் மாதத்தில் கிருஷ்ணன் என்பவரை மாவட்ட குற்ற பிரிவு அலுவலகத்தில் வைத்து விசாரித்தனர். அப்போதுதான் கிருஷ்ணன் என்பவர் ஏமாற்றிவிட்டதாக தெரிந்து கொண்டேன். கிருஷ்ணன் என்பவர் பணம் தருவதாக சொல்லி காசோலை கொடுத்து காசோலை பணம் இல்லாமல் திரும்ப வந்துவிட்டது. அதனால் கிருஷ்ணன் என்பவரிடமிருந்து பணம் வரவேண்டும் என்று சொல்லி எனது முன்னிலையில் விசாரித்தார்கள். அந்த விசாரணைக்காக என்னை சாட்சி கையொப்பம் போட சொல்லி கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் ராஜசேகர் என்பவர் கையொப்பம் செய்தார். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கிருஷ்ணன் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராக இல்லை. அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். போலீசார் என்னை விசாரித்தனர்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2025.09.16 18:01:11 +0530

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு வழக்கு விபரங்கள் சண்முகம் சொல்லி தெரியும். இந்த வழக்கின் புகார்தாரர் பாலசுப்பிரமணியம் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். புகார்தாரர் பாலசுப்பிரமணியத்திடம் எதிரி வியாபாரம் செய்தது தொடர்பாக எனக்கு ஏதாவது தெரியுமா என்றால் சண்முகத்திடம் வியாபாரம் செய்தது தொடர்பாக தெரியும். இந்த வழக்கில் புகார் கொடுக்கும் போது நானும் உடன் சென்றேன். எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை 2012 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம். என்னிடம் கையொப்பம் பெறும்போது என்ன தேதி என்றால் சரியாக ஞாபகம் இல்லை 2012 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம். நான் கையொப்பம் செய்த தாளில் ஏற்கனவே எழுதியிருந்தது அதில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் அதை பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது எதிரியிடமிருந்து என்னென்ன கைப்பற்றினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் எதிரி காசோலை கொடுத்து பணம் வரவில்லை என்ற விவரம் தெரியும் அவர்களிடமிருந்து என்ன கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியாது.

எதிரி கொடுத்த வாக்குமூலமானது கைப்பட எழுதியிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்று நான் பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் கையொப்பம் செய்யவில்லை என்றும், ஏற்கனவே காவல்துறை தயார் செய்து வைத்திருந்த தாளில் கையொப்பம் செய்துவிட்டு புகார்தாரர் எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2025.09.16 18:01:19 +0530